திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டத்திலேதான் நான் அறிந்தவரையில் இன்னமும் அந்தப் பள்ளி இருக்கிறது. சுந்தரதாஸ் சத்திரத்தை விட்டு மாற்றப்படவில்லை. ஆனால் மாற்றியாகிவிட்டது என்று அமைச்சர் கூறுகிறார்கள். எந்தந் தேதியில் மாற்றப்பட்டது என்று கூற முடியுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: மதுரை மாவட்டத்தின் ஆட்சியாளர் திரந்தரக் கட்டிடத்தில் உயர்நிலைப் பள்ளி இருப்பதாகவும், தற்போது ஊராட்சி ஒன்றியப் பள்ளி உயர்நிலைப் பள்ளி நடைபெறும் கட்டடத்திற்குச் சென்றிருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். எந்தத் தேதியில் என்ற விவரம் இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: ஆரம்பப் பள்ளிக் கட்டடத்தில் உயர்நிலைப் பள்ளி நடைபெறுகிறது; உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்திற்குப் போகவில்லை. சுந்தரதாஸ் சத்திரத்தில்தான் நடக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படி மாற்றப்படவில்லை என்பது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா? கொண்டு வரப்பட்டால் தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கேள்வியை 10—3—1970-ல் கொடுத்தார்கள். அப்போதுள்ள நிலையில் பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது உறுப்பினர் சொல்வதை வைத்து விசாரணை செய்கிறேன்.

நெருஞ்சிக்குடி ஆற்றின் குறுக்கே பாலம்

***334 வினா— புலவர் பொ. பொன்னம்பலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதியில் பனையப்பட்டி, பனையூர், குடிமங்கலம் பகுதிகளிலிருந்து இராராபுரம், கூடலூர்ப் பகுதிகளுக்குச் சென்று வரத்தக்க அளவில் எக்காலத்தும் போக்குவரத்திற்கேற்ப கூடலூர் ஆற்றின் (நெருஞ்சிக்குடி ஆறு) குறுக்கே பாலமொன்று அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

கீழ் ராதாம்பூருக்கு அருகில் மணவாய்க்காலின் குறுக்கே பாலம்

***335 வினா—திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலுக்கா, காட்டுமன்னார் கோவில் யூனியனைச் சேர்ந்த கீழ் ராதாம்பூர் கிராமத்துக்கு அருகில் உள்ள மணவாய்க்காலில் வண்டி வாகனங்கள் செல்லும் அளவுக்கு ஒரு பாலம் அமைத்துத்தர அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

1970 செப்டம்பர் 9]

(இ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) தற்சமயம் இம்மாதிரி கருத்து அரசின் பரிசிலனையில் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

கதர் சிட்டங்களுக்கான விலை

***336 வின—திரு. நா. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசாங்க கதர் உற்பத்தி நிலையங்களில் கதர் சிட்டங்கள் எந்த அடிப்படையில் கொள்முதல் செய்யப்படுகின்றன?

(இ) கதர் சிட்டங்கள் கொள்முதல் செய்யும் விதங்களில் மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசம் ஏதாவது இருக்கின்றதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் நடத்திவரும் கதர் உற்பத்தி நிலையங்களில், நூற்பதற்காகக் கொடுக்கப்படும் 1 கிலோ எடையுள்ள பஞ்சுக்கு பொதுவாக 30 மெட்ரிக் சிட்டங்கள் பெறப்படுகின்றன.

(இ) இல்லை.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : அரசிடமிருந்து வாங்கப்படும் நூலுக்கு என்ன விலை? அம்பர் நூலுக்கு என்ன விலை? கைராட்டைச் சிட்டம் நூலுக்கு என்ன விலை ? கட்டாயமாகப் பஞ்சு வாங்கவேண்டும் என்று அந்தத் துறை வற்புறுத்துகிறது. அதை நிறுத்துவதற்கு அரசு முன்வருமா? மேலும், அந்தத் தொழிலை அபிவிருத்தி செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினர் ஒரே சமயத்தில் கதர் கிராமக் கைத்தொழில் வாரியத்தின் பணிகள் முழுவதையும் உள்ளடக்கிக் கேள்வி கேட்டிருக்கிறார்கள். அம்பர் சர்க்காவின் நூல் விலை 35 காசு; கிஸான் ராட்டை சிட்டத்திற்கு 50 காசு. 20 சதவிகிதம் கையடைத் தொகையாகச் சரிக்கட்டப்படுகிறது. கதர் துணியாகத் தரப்படுகிறது. சென்ற ஆண்டில் கோவை மாவட்டத்தில் வறட்சி ஏற்பட்டிருந்ததன் காரணமாக 20 சதவிகிதம் என்பது 10 சதவிகிதம் ஆகக் குறைக்கப் பட்டது. 5--7--1969 முதல் 4--1--1970 வரை ஆறுமாத காலத்திற்கு வேறு மாவட்டங்களுக்கு விரிவு படுத்தப்பட்டு, வைப்புத் தொகை அதிகப்படுத்தப் பட்டு ஊதியத்தை மிச்சப்படுத்த ஊக்கம் அளிக்கப்பட்டது. கிசான் ராட்டைகளை, டெக்ஸ்டூல் ராட்டைகளுக்கு மாற்றுவதால், கதர் உற்பத்தி அதிகமாகி, மேலும் பலருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, இந்தக் கதர் சிட்டங்களை உற்பத்திசெய்ய ஏழை எளிய அரிசனங்களுக்கு ராட்டைகளை இலவசமாகக் கொடுக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?